# மூத்த தலைமுறைக்கு உதவ முன்வரும் பல்கலைக்கழக மாணவர்கள்




மக்கள் கழகம், ஸ்போர்ட் சிங்கப்பூர். சாங்கி பொது மருத்துவமனை, சிங் ஹெல்த் சமூக மருத்துவமனை ஆகியவற்றோடு சிங்கப்பூர் சமூக அறிவியல் பல்கலைக்கழகம் புரிந்துணர்வு ஒப்பந்தங்களை ஏற்படுத்திய நிகழ்வில் கலந்துகொண்டோர். **படம்: SUSS.EDU.SG**

மூத்தோர் மற்றும் அவரது பராமரிப்பாளர்களின் தேவைகளைப் புரிந்துகொண்டு ஆதரவு வழங்கும் தனது மாணவர்களுக்கு உதவ சிங்கப்பூர் சமூக அறிவியல் பல்கலைக்கழகம் (எஸ்யுஎஸ்எஸ்) கடப்பாடு கொண்டுள்ளது.

இது தொடர்பாக நேற்று அப் பல்கலைக்கழகம் இரண்டு புரிந்துணர்வு ஒப்பந்தங்களில் கையெழுத்திட்டது. மக்கள் கழகத்தின் அங் மோ கியோ சமூக நிலையப் பிரிவு, ஸ்போர்ட் சிங்கப்பூர். சாங்கி பொது மருத்துவமனை, சிங் ஹெல்த் சமூக மருத்துவமனை ஆகியன இந்த ஒப்பந்தங்களில் இணைந்துள்ளன.

துடிப்புடன மூப்படைதல், பல தலைமுறைப் பிணைப்பு ஆகியவற்றை ஊக்குவிக்கும் நோக்கம் கொண்டவை இவை.

புதிதாக ஏற்படுத்தப்பட்டுள்ள புரிந்துணர்வு ஒப்பந்தத்தின்கீழ், பல்கலைக்கழகத்தின் மூப்பியல் துறை ஆசிரியர்களும் மாணவர்களும் அங் மோ கியோ சமூக நிலையத்திலுள்ள ActiveSG பயிற்சிக்கூடத்துடன் இணைந்து பணியாற்றுவர். விளையாட்டு, உடல் நலன், கல்வி ஆகியன குறித்த ஆய்வுகளை மேற்கொள்ள இது உதவும்.

தலைமுறைகளுக்கு இடையிலான தொடர்பு பற்றிய ஆய்வு மேற்கொள்ளவும் சாத்தியம் உள்ளதாக பல்கலைக்கழகம் தெரிவித்தது.

நிகழ்வில் பேசிய SportSG அமைப்பின் தலைமை நிர்வாகி லிம் டெக் யின் கூறுகையில், “மகிழ்வான, துடிப்பான வாழ்க்கைமுறையைக் கடைப்பிடிக்க ஆதரவு வழங்கும் குடும்பங்கள், நண்பர்கள், சகஉறவினர்கள் போன்றோரைக் கொண்ட சமூகக் கட்டமைப்பைப் பேணுவதில் நாங்கள் கவனம் செலுத்துகிறோம்,’’ என்றார்.

ம ரு த் து வ ம னை க ளு ட ன் இணைந்து பல்கலைக்கழகம் ஏற்படுத்திய இரண்டாவது ஒப்பந்தம், மூத்த நோயாளிகளுக்கு உதவும் நோக்கிலான சுகாதாரப் பராமரிப்புப் புத்தாக்கம் ஆய்வு, கல்வி போன்றவற்றில் மூன்றாண்டுகளுக்குக் கவனிக்கும்.

இந்தப் பங்காளித்துவத்தின்கீழ் முதுமைப் பிரச்சினைகள் மீதான விழிப்புணர்வை அதிகரிக்கவும் மூத்தோருக்கு சிறந்த வாழ்க்கைச் சூழலை ஏற்படுத்துவதற்கான ஆலோசனைகளை வழங்கவும் சிங்கப்பூர் சமூக அறிவியல் பல்கலைக்கழகமும் மருத்துவமனைகளும் நோக்கம் கொண்டுள்ளதாக பல்லைக்கழகம் குறிப்பிட்டுள்ளது.